DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : சதீஸ்குமார் | Father/Husband Name : சாமிசின்னையன் |
| Age : 43 | Village : மேலூர் |
| Taluk : | Calling : சார்பு ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Feb 10, 2026 3:51 PM

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் மேலூரில் குடியிருந்து வருகிறேன். நான் விருதுநகர், சூலுக்கரை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. நான் கடந்த 26.10.2019 ம் தேதி 21.00 மணிக்கு சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது சாத்தூர் கீழ காந்தி நகரை சார்ந்த கருப்பசாமி மகன் சேர்மராஜ் என்பவர் அவரது தந்தை விபத்து மூலம் இறந்து விட்டதாக கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 558/2019, பிரிவுகள் 279, 304(A) இ.த.ச. ஆக வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையும், அசல் புகார் மனுவையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. பின்னர் காவல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவுப்படி இவ்வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 26.10.2019 ம் தேதி 22.00 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமான சாத்தூர், வெள்ளைக்கரை ரோடு பைபாஸ் பிரிவு கிழக்குபுற தேசிய நெடுஞ்சாலை சென்று சாட்சிகளான வெங்கடேஷ் மற்றும் மாரியப்பன் ஆகியோர் முன்னிலையில் டார்ச் லைட் வெளிச்சத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்கண்ட சாட்சிகளை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலத்தை பதிவு செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. பின்னர் இவ்வழக்கின் புகார்தாரர் சேர்மராஜ் என்பவரையும், பார்வை சாட்சிகளான பசுபதி, மாரிமுத்து ஆகியோரை விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். இரவு நேரம் என்பதால் விசாரணை தொடராமல் மறுநாளான 27.10.2019 ம் தேதி சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு காலை 08.00 மணிக்கு சென்று சாட்சிகளுக்கு சம்மன் சார்பு செய்தும், பஞ்சாயத்தார்கள் மற்றும் பிரேத விசாரணை சாட்சிகளான கணேசன், பாண்டியம்மாள், கருப்பசாமி ஆகியோர் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்தேன். **(பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

5. இவ்வழக்கில் இறந்த கருப்பசாமியின் இறப்பின் காரணம் அறிய சாத்தூர் அரசு மருத்துவர் அவர்களுக்கு பிரேத பரிசோதனைக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தும்,

இவ்வலுவலுக்கு தலைமை காவலர் 1874 திரு. சரவணன் மூலம் தக்க அறிவுரை வழங்கியும், பிரேத பரிசோதனைக்கு பிறகு இவ்வழக்கில் இறந்த கருப்பசாமியின் உடலை அவர்களது குலவழக்கப்படி அடக்கம் செய்ய அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்க கோரியும் அறிவுரை வழங்கினேன். மீண்டும் இவ்வழக்கின் விசாரணையை சாத்தூர் நகர் வட்ட காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் அவர்கள் 03.11.2019 ம் தேதி என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

6. வழக்கு சம்பவம் ஆனது சாத்தூர்– கோவில்பட்டி தேசிய நெடுஞ்சாலையில் நடைபெற்றது என்றால் சரிதான், அந்த பகுதி சாத்தூர் வெள்ளக்கரை சாலை சந்திக்கும் இடமாகும். தேசிய நெடுஞ்சாலையில் விபத்து நடைபெற்றது என்பதால் உடனடியாக எங்கள் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்து விட்டது என்றால் காலதாமதமாக தான் கிடைத்தது. தகவல் கிடைத்ததும் எங்களுடைய காவல் நிலையத்திலிருந்து யாராவது சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றார்களா என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

7. பொதுவாக மேற்படி நான்கு வழிச்சாலையின் மேற்கு பக்கத்திலிருந்து கிழக்கு பக்கம் வரவேண்டும் என்றால் வெள்ளை கரை சாலை அருகே இருக்கக்கூடிய பாலத்தின் அடி வழியாகத்தான் வந்து வர வேண்டும் என்றால் சரிதான். அதேபோல், மேற்குப் பக்க சர்வீஸ் சாலை வழியாக வெம்பக்கோட்டை சந்திப்பு சாலைக்கு வந்து, வெள்ளக்கரை சாலைக்கு வர முடியும் என்றால் சரிதான், ஆனால் சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருந்து மேற்படி வெம்பக்கோட்டை சந்திப்பு சாலை சுமார் 1 ½ கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது. நான்கு வழிச்சாலையின் மேற்குப் பக்கத்திலிருந்து இந்த வழக்கு விபத்து நடைபெற்றதாக கூறப்படும் வெள்ளக்கரை சாலை சந்திப்பு பகுதிக்கு வருவதற்கு நான்கு வழிச் சாலையின் குறுக்கே பாதை எதுவும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான்.

8. என்னுடைய விசாரணையின் போது சாட்சி சேர்மராஜ் அவருடைய நண்பருடன் சேர்ந்து நான்கு வழி சாலைக்கு மேற்கு பக்கம் உள்ள SSS காம்ப்ளக்ஸ் முன்பு நின்று பேசிக் கொண்டிருந்ததாக கூறினாரா என்றால் இல்லை. என்னுடைய விசாரணையில் இந்த வழக்கில் கொடுக்கப்பட்டுள்ள புகாரை யார் எங்கு வைத்து எழுதினார்கள் என்பது தெரிய வந்ததா என்றால் அது பற்றி குறிப்பிட்டு தெரிய வரவில்லை, காவல் நிலையத்திற்கு வரும்போது புகாரை எழுதிக் கொண்டு வந்தார். அ.சா.1 – சேர்மராஜ் இந்த வழக்கு விபத்தின் சத்தம் கேட்டு தான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்ததாகவும், அந்த இடத்தில் கூட்டமாக இருந்தது என்றும், அங்கு சென்று பார்த்த பிறகு தான் விபத்தில் காயம்பட்ட நபர் தன்னுடைய தந்தை என்றும் என்னுடைய விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் இல்லை.

9. அ.சா.2 – பசுபதி 26.10.2019 ம் தேதி அவர் அ.சா.1–சேர்மராஜ் மற்றும் அ.சா.3–மாரிமுத்து ஆகியோர்களுடன் வெள்ளைக்கரை சாலையில் 07.00 மணி முதல் 07.20 மணி வரை நின்று பேசிக் கொண்டிருந்ததாக என்னுடைய விசாரணையில் கூறியுள்ளார் என்றால் சரிதான், ஆனால் நேரத்தை 07.20 மணி என்று கூறியுள்ளார். வழக்கு விபத்து தொடர்பாக சாத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து எங்களுக்கு தகவல் கிடைத்ததா என்றால் காலதாமதமாக அந்த தகவல் கிடைத்தது. அ.சா.1 மற்றும்

அ.சா.2 ஆகிய இருவரும் என்னுடைய விசாரணையில் இந்த வழக்கில் இறந்து போன நபருக்கு மது அருந்தக் கூடிய பழக்கம் உண்டு என்று கூறியுள்ளார்கள் என்றால் இல்லை.

10. அ.சா.3 – மாரிமுத்து என்னுடைய விசாரணையின் போது அவரும் சேர்மராஜன் வெள்ளைக்கரை சாலை அருகே SSS காம்ப்ளக்ஸ் அருகே பேசிக் கொண்டிருந்ததாக கூறியுள்ளாரா என்றால் வெள்ளை கரை சாலை சந்திப்பில் நின்று பேசிக் கொண்டிருந்ததாக கூறியுள்ளார். அ.சா.3–மாரிமுத்து என்னுடைய விசாரணையில் கோவில்பட்டி தேசிய நெடுஞ்சாலையில் சத்தம் கேட்டு தான் சென்று பார்த்ததாக கூறியுள்ளார் என்றால் இல்லை. அ.சா.3–மாரிமுத்து என்னுடைய விசாரணையில் அவர் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று கூறினாரா என்றால் இல்லை.

11. அந்த நேரத்தில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆகியவற்றை இயந்திரத்தனமாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Feb 10, 2026 4:16 PM

Judicial Magistrate 2, Sattur